# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අதி விசேஷமானது

අංක 1950/49 - 2016 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා - 2016.01.22

*1950/49 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : சிஎஸ்ஏ/7/சிஓஐ/எம்எஸ்/01*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

1. திரு. பிரீத்தி பத்மன் சூரசேன அவர்கள்
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
2. திரு. தேகிரி அமேந்திர மெண்டிஸ் செனவிரத்ன அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
3. திரு. குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
4. திரு. பஸ்துன்கோரளே ஆரச்சிகே பேமதிலக அவர்கள்
   ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி
5. திரு. விகும் அத்துல களுஆரச்சி அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 3 ஆந் திகதிய அதிகாரப்பத்திரத்தின் மூலம், என்னால் விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும், சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரும் தவிசாளருமாக கடமையாற்றிய மேல் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகிய பிரீத்தி பத்மன் சூரசேன அவர்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு, மேற்போந்த அதிகாரப் பத்திரத்தின் வண்ணம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் தவிசாளராக இத்தால் நியமிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

2 - 218

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.